# TAMILNADU RECOGNISED NURSING SCHOOLS AND COLLEGES ASSOCIATION (Regd).

Karur Benefit Fund Limited Building, No. 336, Jawahar Bazaar,
Karur - 639 001.
Web : www.tnrnsca.com Email : tnrnsca@gmail.com Cell : 98430 56440


## முக்கிய ஆலோசனை கூட்ட அறிவிப்பு

தமிழ்நாடு அரசு அங்கீகாரம் பெற்ற நர்சிங் பள்ளி மற்றும் கல்லூரிகள் சங்கத்தின் முக்கிய ஆலோசனைக் கூட்டம் சென்னை எக்மோர் சந்திரா பார்க் ஹோட்டலில் வருகின்ற **16.04.2015** வியாழக்கிழமை **காலை 9.30 மணி** அளவில் நடைபெறும்.

கூட்டத்தில் கீழ்க்கண்ட பொருள்கள் குறித்து விவாதிக்கப்பட உள்ளது :–

### 1. DTCP Approval:-

நகர் ஊரமைப்பு இயக்குநர் (Directorate of Town and Country Planning) அலுவலகத்திலிருந்து அனைத்து நர்சிங் கல்லூரிகளுக்கும் உடனடியாக DTCP அனுமதி பெறவேண்டும், இல்லையெனில் கல்லூரிகளுக்கு சீல் வைப்போம் என்று பதிவுத் தபாலில் கடிதம் வந்துள்ளது.

DTCP Approval சுமையை எவ்வாறு நிவர்த்தி செய்வது விவாதித்து முடிவு எடுப்பது.

### 2. 37-B Permission:-

அறக்கட்டளை பெயரில் உள்ள நிலத்திற்கு நிலஉச்சவரம்பு சட்ட விதிப்படி தமிழக அரசிடம் அனுமதி பெற வேண்டி விண்ணப்பித்தவர்களுக்கு அந்தந்த மாவட்ட வருவாய்த்துறை அதிகாரி பார்வையிட்டு சென்றுள்ளார்கள். இது குறித்து மேலும் விவாதித்து முடிவு எடுப்பது.

### 3. நவீன சான்றிதழ்:-

40 ஆண்டுகளுக்கு மேலாக எவ்விதமான மாற்றமும் இல்லாமல் வெளிநாடுகளில் அங்கீகரிப்பத்தில் சிரமமாக இருந்த பழைய GNM பட்டயச் சான்றிதழை அதிநவீனமான முறையில் மாற்றி வழங்க நமது சங்கத்தின் சார்பாக கம்ப்யூட்டர், குளிர்சாதனம், மற்றும் சில உபகரணங்கள் வழங்கப்பட்டது. மேலும் கடந்த ஆண்டு நமது தமிழக சுகாதாரத்துறை அமைச்சர் அவர்களால் புதிய நவீன சான்றிதழ் வழங்கும் விழா சென்னை MMC கல்லூரியில் நடைபெற்றது. ஆனால் நாளது தேதி வரை மாணவர்களுக்கு நவீன சான்றிதழ் வழங்கவில்லை. இந்த அவல நிலை நீங்க தொடர்ந்து தமிழக அரசினை வலியுறுத்துவது.

### சங்க நிர்வாகிகளுக்கு பாராட்டு:-

1. அரசு வேலைவாய்ப்பு வழக்கில் உச்சநீதிமன்றத்தில் வெற்றி பெற்று, அதனைத் தொடர்ந்து தமிழக அரசிடம் தொடர்ந்து வலியுறுத்தியதின் விளைவாக விரைவில் 7297 செவிலியர்களுக்கு வேலைவாய்ப்பு வழங்கப்படும் என்று தமிழக அரசால் சட்டப்பேரவையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த அரிய சேவையினை செய்த நமது சங்க நிர்வாகிகளுக்கு பாராட்டு தெரிவிப்பது.

2. கடந்த 8 ஆண்டுகளாக உயர்த்தப்படாமல் இருந்த B.Sc., Nursing கல்விக்கட்டணத்தினை ரூ. 30000/– இருந்து ரூ. 40000/–மாக அதாவது 30 சதவிகிதம் உயர்த்திட பாடுபட்ட நமது சங்க நிர்வாகிகளுக்கு பாராட்டு தெரிவிப்பது.

3. ஒரு சில நர்சிங் பள்ளிகளைத் தவிர பெரும்பான்மையான நர்சிங் பள்ளிகளில் GNM பாடப்பிரிவில் முழுமையாக மாணவ, மாணவிகள் சேர்க்கை இல்லாமல் இருந்தது. இதனை மாற்றிட நமது வேண்டுகோளுக்கு இணங்கி தமிழக அரசு வருகின்ற கல்வியாண்டில் இருந்து GNM பாடப்பிரிவில் கலந்தாய்வு மூலம் மாணவ, மாணவிகள் சேர்க்கை நடத்திட முடிவு செய்துள்ளது. இதற்காகவும் பாராட்டு தெரிவிப்பது.

   இதனால் அரசு வேலைவாய்ப்பு பெறுவதில் இருந்த பாகுபாடு முழுமையாக நீங்கும்.

4. நமது Dr.M.G.R மருத்துவ பல்கலைக்கழகம் கல்லூரி வளர்ச்சிக்காக வங்கியில் கடன் வாங்கியுள்ள கல்வி நிறுவனங்களுக்கு அங்கீகாரம் வழங்காமல் இருந்தது. நமது சங்கத்தின் வேண்டுகோளின்படி இந்த விதியினை 5 ஆண்டுகளுக்கு தளர்த்திட முடிவு செய்துள்ளதற்கு பாராட்டு தெரிவிப்பது.

5. **தனி பல்கலைக்கழகம் :–**

தமிழகத்தில் மருத்துவத்துறையில் மிகச் சிறந்த சேவை புரிந்து வருகின்ற நர்சிங் படிப்பில் ஒவ்வொரு ஆண்டும் 25,000 மாணவ, மாணவிகள் படித்து வெளிவருகிறார்கள்.

குறிப்பாக தமிழகத்தில் நர்சிங் கல்லூரிகள் 160, நர்சிங் பள்ளிகள் 240 என 400 கல்வி நிறுவனங்கள் நர்சிங் படிப்பினை நடத்தி வருகின்றார்கள்.

தமிழகத்தில் 4 கல்லூரிகள் உள்ள விளையாட்டு படிப்பிற்கு தனிப்பல்கலைக்கழகம் உள்ளது. அதுபோல் 2 கல்லூரிகள் மட்டுமே உள்ள தோட்டக்கலைத்துறைக்கு தனிப்பல்கலைக்கழகம் உள்ளது. 1 கல்லூரி மட்டுமே உள்ள தமிழ் கல்விக்கு தனிப்பல்கலைக்கழகம் உள்ளது. ஆனால் 400 கல்வி நிறுவனங்கள் உள்ள நர்சிங் படிப்பிற்கு தனிப்பல்கலைக்கழகம் இல்லாதது ஆச்சர்யம் அளிக்கிறது. அதோடு அல்லாமல் தனிப்பல்கலைக்கழகம் இருந்தால் நமது தமிழகத்தில் செவிலியர் துறை இன்னும் மிகப்பெரிய வளர்ச்சி அடையும் என்பது நிச்சயம். எனவே நர்சிங் படிப்பிற்கு என தனிப் பல்கலைக்கழகம் அமைக்க தமிழக அரசை வலியுறுத்துவது.

6. **GNM தேர்வு மையம் :–**

தமிழ்நாடு டாக்டர் M.G.R மருத்துவ பல்கலைக்கழகத்தால் அங்கீகரிக்கப்பட்ட தனியார் நர்சிங் கல்லூரிகளில் பல்கலைக்கழக தேர்வினை அந்தந்த கல்லூரிகளே நடத்த தேவையான அனைத்து நவீன வசதிகளும் உள்ளது. இந்த நடைமுறை கடந்த ஆறு ஆண்டுகளுக்கு மேல் மிகச்சிறப்பாக நடைபெற்று வருகிறது. இதே போல் செவிலியர் பள்ளிகளும் தேர்வினை அந்தந்த பள்ளிகளில் நடத்திட அனுமதிக்குமாறு தமிழக அரசை வலியுறுத்துவது. இதனால் தேர்வு எழுத 20 முதல் 50 கிலோ மீட்டர் வரை மாணவிகள் தலைமை மருத்துவமனைக்கு தினசரி செல்வது குறையும் என எடுத்துக்கூறுவது.

**முக்கிய கவனத்திற்கு**

- கூட்ட நுழைவுக் கட்டணம் ரூ.500/–
- நண்பகல் உணவு வழங்கப்படும்
- உச்சநீதி மன்ற வழக்கிற்காக நமது சங்கம் நிதி நிறுவனத்திடம் இருந்து கடன் பெற்று வழக்கினை நடத்தியுள்ளோம். ரூ. 13 இலட்சம் கடன் திருப்பி கொடுக்க வேண்டியுள்ளது. எனவே, இதுவரை உச்சநீதிமன்ற வழக்கு நிதியுதவி வழங்காதவர்கள் குறைந்த பட்சம் ரூ. 25000/– நிதியுதவி வழங்கிட வேண்டுகிறோம்.

  அல்லது ஒவ்வொரு மாணவ, மாணவிகளிடம் இருந்து ரூ. 200/– பெற்று வழங்கிட வேண்டுகிறோம்.

  சங்க வருடாந்திர சந்தா தொகை ரூ. 3000/– யாரும் வழங்குவதில்லை, எனவே கூட்டத்திற்கு வரும் பொழுது குறைந்த பட்சம் 2வருடத்திற்கான சந்தா தொகையினை கொண்டு வர வேண்டுகிறோம்.

  நிதியில்லாமல் சங்கத்தினை வழி நடத்திட இயலாது என்பது நாம் அனைவரும் அறிந்ததே. எனவே, நிதியுதவி அளித்திட வேண்டுகிறோம்.

**சிறப்பிதழ்**

அரசு வேலைவாய்ப்பு வழக்கில் வெற்றிபெற்றதை சிறப்பிக்கும் வகையில் நமது சங்கத்தின் சார்பாக சிறப்பு மலர் வெளியிட இருக்கின்றோம். இதற்கு தங்களின் நல்ஆதரவை எதிர்பார்க்கின்றோம்.

மேலும் இச்சிறப்பிதழுக்கு தங்களுடைய கல்வி நிறுவனங்களின் விளம்பரம் (A4 Size) CD- யாக வழங்கிட வேண்டுகிறோம். இதற்கான கட்டணம் ரூ. 5000/– மட்டுமே.

**உடனடியாக நன்கொடை வழங்கவேண்டிய விபரம்**

Demand Draft Favoring in the Name of : TNRNSCA Payable at Karur என்ற பெயரிலோ அல்லது கீழ்கண்ட வங்கி கணக்கில் நேரடியாகவோ செலுத்த வேண்டுகிறோம்.

| | |
|---|---|
| Name of the Bank | : **The Lakshmi Vilas Bank, Karur Main Branch.** |
| Name of the Account | : **Tamilnadu Recognised Nursing Schools & Colleges Association** |
| Current Account No. | : **0362351000004579** |
| IFSC Code | : **LAVB0000362** |

வழக்கு நிதி ரூ. 25,000/-
Corpus Fund ரூ. 5,000/-
ஆண்டு சந்தா கட்டணம் ரூ. 3,000/-

TNRNSC **கூட்டமைப்பு**

| **R. விவேகானந்தன்** | **S. சிதம்பரம்** | **A. குணசிங்** |
|---|---|---|
| தலைவர். | ஒருங்கிணைப்பாளர். | செயலாளர். |
| 94433 83680 | 98430 56440 | 98422 82224 |